# கலாசார விழா - 2011

## கரைஎழில் விருதும் கௌரவமும்

பிரதேச செயலகம்
கரைச்சி
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார விழா - 2011

# கரைஎழில் விருதும் கௌரவமும்

பிரதேச செயலகம்

கரைச்சி

கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருதும் கௌரவமும்

ஒரு சமூகத்தின் சிறந்த கட்டமைப்புக்கு அச்சமூகத்தில் தோன்றும் கலை, இலக்கியங்களும் காரணமாகின்றன. கலை இலக்கியம் மனித வாழ்வியலையும், மனித மனங்களையும் மேம்படுத்தும் ஒரு மருத்துவம். அந்தக்கலைகளிலும் இலக்கியங்களிலும் ஈடுபடுபவர்கள் அச்சமூகத்தின் தூண்களாவர். எனவே அச்சமூகத்தின் தூண்களான கலை இலக்கியங்களைப் படைக்கும் கலைஞர்கள் இலக்கியவாதிகள் வாழும் காலத்தில் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

கரைச்சி பிரதேச செயலகம் நீண்ட காலத்தின் பின்னர் கலாசார விழாவினை நடத்தும் இவ்வேளையில் இக்கலைஞர்கள், எழுத்தாளர்களை கௌரவிப்பதில் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் பெருமை கொள்கிறது. இவர்கள் ஆற்றிய, ஆற்றி வரும் பணிகளுக்காக கரைஎழில் எனும் விருதும், கௌரவமும் வழங்கப்படுகிறது.

திரு கோ.நாகேஸ்வரன்
பிரதேச செயலர்
பிரதேச செயலகம் கரைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளையத்தம்பி தம்பி நடராசா
முகவரி:- 761 திருநகர் வடக்கு கிளிநொச்சி

கிளிநொச்சியில் திருநகர் கிழக்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த இளையதம்பி நடராசா ஒரு முதிர்ந்த எழுத்தாளராவார். 1939ஆம் ஆண்டு மாசிமாதம் 11ஆம் திகதி இளையதம்பி பார்வதி தம்பதியினரின் புதல்வராக பரவிப்பஞ்சானில் பிறந்த நடராசா கிளிவெட்டி மத்திய கல்லூரியில் 09ஆம் தரம் வரை கல்வி கற்றுள்ளார். பின்பு கட்டடத் தொழிலை தனது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகிறார். தனது இளம்பராயத்திலிருந்தே இலக்கியத்துறையின் மீது இவருக்கு ஆர்வம் இயல்பாக ஏற்பட்டது. 1957ஆம் ஆண்டில் சில பத்திரிகை களுக்கு தனது ஆக்கங்களை எழுதி அனுப்பினார். ஆனால், அக்காலகட்டங்களில் அவை பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை. இருப்பினும் தனது விடாமுயற்சியால் 1968ஆம் ஆண்டு இவரது கன்னிக் கதை 'வடா மல்லிகை' எனும் தலைப்பில் 'தினபதி'ப் பத்திரிகையில் பிரசுரமானது. தொடர்ந்து சுதந்திரன் பத்திரிகையும் இவரது ஆக்கங்களுக்கு ஊக்கமளித்தது.

1965ஆம் ஆண்டின் பின் பூண்டுலோயாவில் இருந்து வெளிவந்த 'வெற்றிமணி' சஞ்சிகையில் 'பசுவும் கயிறும்', 'முதலாளியும் தொளிலாளியும்', 'இதயக் கோயிலும் இறைவழிபாடுகளும்', 'தாயும் சேய்களும்', 'திருவள்ளுவரும் திருக்குரலும்', போன்ற தலைப்புக்களி லான தத்துவக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இக்காலகட்டங்களில் இவர் இ.என.ராசா, திருநகர் நடராசன் ஆகிய பெயர்களிலும் எழுதிவந்துள்ளார்.

இவர் இதுவரை 75க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 200க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், ராதா போன்ற பத்திரிகைகளிலும், பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. திருகோணமலை இலக்கிய ஒன்றியம் இவரது 30 சிறுகதைகளைத் தொகுத்து 'மண்ணின் வேர்கள்' எனும் தலைப்பில் 2006இல் வெளியிட்டது. இன்றுவரை வீரகேசரி, தினக்குரல், மல்லிகை போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். 2008ஆம் ஆண்டு இவரது நேர்காணல் ஒன்று ஐ தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியது. தொடர்ந்து தினக்குரலிலும் இவரது நேர்காணல் பிரசுரமானது. மானுடத்தை அதிகமாக நேசிக்கும் எழுத்தாளர். இறைநம்பிக்கை பற்றி தன்னுடைய அண்மைய கதைகளில் அதிகமாக எழுதி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜயாக்கண்ணு ஆறுமுகம்

பிறந்த திகதி:- 25.09.1943
பிறந்த இடம்:- களுத்துறை
முகவரி:- மலையாளபுரம்
சம்பந்தப்பட்ட துறை:- ஆர்மோனியக்கலைஞர், பொம்மலாட்டக்கலைஞர்
துறை அனுபவம்:- முப்பது வருடங்களுக்கு மேல்
1968ம் ஆண்டு முதல் காலியில் ஆர்மோனியம் பயின்று கிராமிய கலைநிகழ்வு, திருமண நிகழ்வுகளில் ஆர்மோனியம் வாசித்திருக்கிறார். 1981ம் ஆண்டு தொடக்கம் மலையாளபுரத்தில் வாழ்ந்து வருகிறார். இங்கு பல கோயில் நிகழ்வுகளில் ஆர்மோனியம் வாசித்து வருகிறார். பல வருடகால அனுபவம் கொண்ட இக்கலைஞருடைய சேவையைப்பாராட்டி இவ்விருது வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தி ஐயம்பிள்ளை
பிறந்த திகதி:- 10.04.1944
பிறந்த இடம்:- அனலைதீவு
தற்போதைய முகவரி:- ஐயனார் புரம் கிளிநொச்சி
சம்பந்தப்பட்ட துறை:- கூத்து
துறை அனுபவம்:- முப்பது வருடங்களுக்கு மேல்

அனலைதீவில் 1944ம் ஆண்டு பிறந்த இவர் 1954ம் ஆண்டில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். பரந்தன் பாம்புக்கமம் எனும் கிராமத்தில் நாகதம்பிரான் கோயிலில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் கலைஞர்கள் 'மாரியம்மன், காத்தவராயன், அரிச்சந்திரன்' போன்ற நாடகங்களை மேடை ஏற்றிச் செல்வார்கள். அவற்றைப் பார்த்து இவரது மனதிலும் இவ் ஆர்வம் எழவே கலைப்பயணத்தில் நுழைந்திருக்கிறார். அதன் பின்னர் வன்னேரிக்குளத்தில் 11தடவைகளுக்கு மேல் காத்தவராயன், மாரியம்மன் நாடகங்களை மேடைஏற்றி உள்ளார். இவருடைய நாடகங்கள் உடுக்குத்தாளத்துடனேயே நடைபெறும். உடுக்கடிக்கதைகள் செய்யக் கூடியவர். தற்பொழுதும் உடுக்குத் தாளத்துடன் கோயில்களில் பாடி வருகிறார். இவருடைய கலைவாழ்வு அனுபவத்துக்காக இவ்விருது வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேலன் சின்னத்தம்பி

பிறந்த திகதி:- 06.06.1942
பிறந்த இடம்:- மந்துவில் கிழக்கு கொடிகாமம்
முகவரி:- ஸ்கந்தபுரம் கிளிநொச்சி
சம்பந்தப்பட்ட துறை:- கூத்து நடிகர்,ஆர்மோனியக்கலைஞர்.
துறை அனுபவம்:- 59 வருடங்கள்

இவருடைய குடும்பம் பாட்டன், பூட்டன் காலத்து கலைப்பாரம்பரியத்தைக் கொண்டது. இவரது தந்தையாரான சின்னத்தம்பி வேலன் அவர்கள் நாட்டுக்கூத்து, நாடக்கலைஞராகவும், ஆர்மோனியக், பக்கவாத்தியக் கலைஞராகவும் பல மேடைநாடகங்களையும் நாட்டுக் கூத்து நிகழ்வுகளையும் நடத்தி வந்துள்ளார். அவருடன் இணைந்து 1952ம் ஆண்டு முதல் இவர் பணியாற்றி வருகிறார்.

பல ஆண்டுகளாக மேடைகளிலும், நாட்டுக்கூத்துகளிலும் ஆர்மோனியம் வாசிப்பதுடன் அரிச்சந்திர மயானகாண்டம், சத்தியவான் சாவித்திரி, அல்லி அருச்சுனா, இராமாயணக்கதை, கோவலன்கண்ணகி, பவளக்கொடி போன்ற நாட்டுக்கூத்துகளிலும் காத்தவராயன் கூத்தில் பல பாத்திரங்களை ஏற்றும் நடித்துள்ளார். 1980ம் ஆண்டுகளில் அரசகதை நாடகங்களிலும் சமூக நாடகங்களிலும் பல பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்.

அத்துடன் பக்திப்பாடல்களும் பாடக்கூடிய குரல் வளம் உள்ளவர். பல ஆலயங்களில் பாடி இருக்கின்றார். இவரது பல்லாண்டு கலைப்பணியின் போது பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள், ஆவணங்கள் எல்லாம் இடப்பெயர்வின் போது தவறவிடப்பட்டுள்ளது. தொடர்ந்தும் தனது பணியினை மேற்கொண்டு வருகிறார். பல்லாண்டு கால இவரது கலைப்பணிக்காக இவ்விருது வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்பச்சி வல்லிபுரம்

பிறந்த திகதி:- 10.09.1941
முகவரி:- திருநகர் வடக்கு
பிறந்த இடம்:- பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம்
சம்பந்தப்பட்ட துறை:- கூத்து
துறை அனுபவம்:- நாற்பது வருடங்களுக்கு மேல்
பெற்ற விருதுகள்:- கலாபூஷணம்

யாழ்ப்பணத்தில் பிறந்த இவர் 1956ம் ஆண்டு முதல் கிளிநொச்சியில் வசித்து வருகிறார். இவரது தகப்பனார் பாரம்பரிய கூத்துக்களை மட்டுவில் அம்மன் கோயிலில் மேடை ஏற்றி வருவார். அதில் சிறுசிறுபாத்திரங்களில் இவர் நடித்திருக்கிறார். அதன்பின்னர் இவரது காணியில் இருக்கும் அம்மன் ஆலயத்தில் உடுக்கு அடித்து காத்தவராயன் பாடல்களை பாடிவந்திருக்கிறார். தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் அவ் ஆலயத்தில் காத்தவராயன் கூத்தினை மேடை ஏற்றி வருகிறார்.
தமிழ்மக்களின் பாரம்பரிய கூத்து வடிவங்கள் காலப்போக்கில் அழிந்துவிடாமல் இருக்க அதை இளைய தலைமுறையினருக்கு கற்றுக் கொடுத்து புத்துயிர் வழங்க வேண்டும் என்ற விருப்பில் இன்று வரை பல பாடசாலைகளில் கூத்தினை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறார். ஆரம்ப காலத்தில் முத்துமாரி அம்மன் நாடக மன்றம் என்ற ஒரு மன்றத்தினை உருவாக்கி அதனூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று ஆண்டுகளில் 75 தடவைகளுக்கு மேல் மேடை ஏற்றி உள்ளார். இவர் இப்பணிகளுக்கான ஊதியம் எதுவும் வாங்குவதில்லை கலைப்பாரம்பரியம் தொடரவேண்டும் என்ற நோக்கில் தனது பணியினைச் செய்து வருகிறார்.
இவருடைய பணியினை விதந்து கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளது. 2007ம் ஆண்டு இவருடைய கலைச் சேவைக்காக அரசாங்கம் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. தொடர்ந்து பல பாடசாலைகள், பொது அமைப்புக்கள் இவரை இன்றுவரை கௌரவப்படுத்தி வருகின்றன. தொடந்து காத்தவராயன் கூத்தினை பாடசாலை மாணவர்களுக்கு பயிற்றுவித்துவருகிறார். இவருடைய இந்தச் சேவைக்காக இவ்விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கே.அலெஸ்சான்டர்

பிறந்த ஆண்டு:- *1962*
முகவரி:- விநாயகபுரம் கிளிநொச்சி
சம்பந்தப்பட்ட துறை:- நாடகம்
துறை அனுபவம்:- இருபது வருடங்கள்

*1970*ம் ஆண்டு கனகபுரம் பாடசாலையில் கற்கும் போதே இவரது கலைவாழ்வு ஆரம்பமாகியது. பாடசாலை மட்டத்தில் பல சரித்திர நாடகங்களை அரங்கேற்றி இருக்கிறார். *1980*ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட சிறந்த நடிகராக தெரிவு செய்யப்பட்டார். பாடசாலை வாழ்வின் பின்னர் பல நாடக மன்றங்களினூடாக பல சமூகச் சீர்திருத்த நாடகங்களில் நடித்துள்ளார். *1986*ம் ஆண்டு விநாயக புரத்தில் ஒரு நாடக மன்றத்தினை உருவாக்கி அதன் மூலம் 'சிரிக்குதடி சீதனம், வேண்டாம் சீதனம், வைத்தியர் வைத்திலிங்கம், விதியின் விளையாட்டு, என்றும் பதினாறு, உதிர்ந்த பூக்கள், கூடிவாழ்வோம்' என்று பல நாடகங்களை நெறிப்படுத்தி நடித்துள்ளார். அத்துடன் பல தெருவழி நாடகங்களிலும் நடித்துள்ளார். நடிகராகவும், நாடக இயக்குநராகவும் இவர் செய்த சேவைக்காக நாடகத்துறைக்கான விருது வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை
பிறந்த திகதி:- 05.11.1953
பிறந்த இடம்:- மயிலிட்டி
முகவரி:- மலையாளபுரம்
சம்பந்தப்பட்ட துறை:- பல்துறை ( சினிமா, வானொலி, நாடகம், எழுத்து)
துறை அனுபவம்:- நாற்பது வருடங்களுக்கு மேல்

க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்ற இவர் பாடசாலைக் காலத்திலேயே பாடசாலை மட்டத்தில் பேச்சுப் போட்டிகள், நாடகப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் என அனைத்துப் போட்டிகளிலும் பங்கு பற்றி அகில இலங்கை ரீதியில் பரிசில்களை பெற்றுள்ளார்.

பாரம்பரியக் கலைஞர்களான இவரது தந்தையார் காலஞ்சென்ற சின்னார் வல்லிபுரம், சகோதரரான காலஞ்சென்ற வல்லிபுரம் குணலிங்கம் ஆகியோரின் அனுசரணையில் கலையரசு சொர்ணலிங்கம், தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர்களில் வழிகாட்டல்களில் பல நாடகங்களை நெறிப்படுத்தி சிறந்த நடிகனாகப் பரிசு பெற்றுள்ளார். குரல் பயிற்சி, நாடக அரங்குப் பயிற்சிகளில் பயிற்சி பெற்றுள்ளார்.

1973ம் ஆண்டு இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ் மற்றும் சிங்களத் திரைப்படங்களான H.C. பிலிம்சின் கென்றி சந்திரவன்ச இயக்கத்தில் உருவான 'சுமதி எங்கே' மற்றும் சிங்களத் திரைப்படங்களான 'வனகெத கெல்ல', 'பலித நிம' போன்ற திரைப்படங்களில் நடித்துள்ளார். இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பான 'தீ' போன்ற படங்களிலும் மேலும் பல குறும்படங்களிலும் நடித்துள்ளார்.

1974ம் ஆண்டு இலங்கை வானொலியின் நாடக சேவை ஆரம்பிக்கப்பட்ட போது மானம் என்ற நாடகத்தில் சோழன் செங்கண்ணனாகக் குரல் வழங்கியுள்ளார். 1990ம் ஆண்டுக்குப் பின்னர் ஆங்கில மொழி பெயர்ப்புத் திரைப்படங்களுக்கு கதாநாயகனுக்கும், வில்லனுக்கும் குரல்வழங்கி பலரதும் பாராட்டினைப் பெற்றுள்ளார்.

வானொலி நாடகப்பிரதியாக்கல், மற்றும் சிறுகதை, கவிதைப் போட்டிகளில் தேசிய ரீதியிலும் பங்கு பற்றியுள்ளார். இவரது சிறுகதைகள், கவிதைகள் பல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. சேக்ஸ்பியரின் 10 நாடகங்களை இயக்கி மேடையேற்றி அதில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார். 1982ம் ஆண்டு கிழக்கு மாகாணம் கரைதீவில் கவிஞன் நாடகத்தில் கவிஞனாக நடித்து இந்தியக் கலைஞர்களால் பாராட்டுப் பெற்றுள்ளார். 1972ம் ஆண்டு மல்லாகத்தில் நடந்த தமிழாராட்சி மாகாநாட்டில் தண்ணீரும் சுடும் என்ற நாடகத்தில் கதாநாயகனாக நடித்து அனைத்து இலங்கை அச்சு ஊடகங்களாலும் பாராட்டப் பெற்றவர். 1990ம் ஆண்டில் வெளிநாட்டுக் கலைக்குழுவிடம் குரல் பயிற்சி பெற்றுள்ளார்.

இவரது பல்துறை சார்ந்த ஆளுமைக்காக சிறந்த கலைஞருக்கான விருது வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவராஜா சிவகருணாகரன்

ஈழத்து இலக்கியத்தில் கவிதைத்துறையில் தனக்கென ஒரு இடத்தினைப் பிடித்துக்கொண்டவர். 1980களில் இருந்து எழுதத் தொடங்கிய இவர் கவிதை, கட்டுரை என பல இலக்கிய முயற்சிகளை தற்போது வரை மேற்கொண்டு வருகிறார். மனிதம் பற்றியும், மனிதநேயம் பற்றியதாகவே இவரது அனேக கவிதைகள் காணப்படுகின்றன. ஒரு பொழுதுக்காக காத்திருத்தல், ஒரு பயணியின் நாட்குறிப்பு, பலி ஆடு, எதுவுமல்ல எதுவும். என்பன இவரது கவிதைத் தொகுதிகள். ஈழத்தில் மட்டுமல்ல இந்திய எழுத்தாளர்களாலும் போற்றப்படுபவர். சிறப்பாக இந்தியாவின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ஜெயமோகன் தனது 'உள்ளுணர்வின் தடத்தில்' என்ற நூலினை இவருக்கு சிறப்புச் செய்யும் வகையில் கையுறையாக வழங்கியுள்ளார். இவரது இலக்கிய முயற்சியை கௌரவிக்கும் வகையில் பலி ஆடு, எதுவுமல்ல எதுவும் என்னும் கவிதை நூல்களுக்காக இவருக்கு இவ்விழாவில் இலக்கியத்திற்கான கௌரவம் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓவியர் தீசன்

கிளிநொச்சி பாரதிபுரத்தில் வசித்துவரும் திரு. சிவராமதீசன் (ஓவியர் தீசன்) பல்துறைக் கலைஞனாக தனது ஆற்றல்களை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். இவரது ஆற்றலின் வெளிப்படாக பல கலைவடிவங்களைப் படைத்த போதிலும் கூட ஓவியக் கலையை தனது இலட்சியப்பயணமாக கொண்டு செயற்படுகிறார். இவருடைய ஓவியப்படைப்புக்காக பலராலும் பாரட்டப் பெற்றவர். ஓவியக்கலைக்காக இவருக்கு இக்கௌரவம் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிமுத்து இராசதுரை (நாதசுரக்கலைஞர்)

நாதசுரக்கலைஞரான இவர் நாதசுரக் கலையினை முறையாகப் பயின்று தனது பதினாறாவது வயதில் இருந்து வாசித்து வருகிறார். இவருடைய திறமையினை விதந்து பல ஆலயங்கள் இவருக்குச் சிறப்புக்கள் செய்திருக்கின்றன. கிளிநொச்சியில் தொடந்து நாதசுரக்கலையினை மங்கள நிகழ்வுகளில் வாசித்து வரும் இவரது நாதசுரக் கலைப்பணிக்காக இக்கௌரவம் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி செல்வராணி சேகரம்பிள்ளை

சிறுவயதில் இருந்தே ஆன்மீகப் பற்றும் இசை ஆர்வமும் கொண்ட இவர் ஆலயங்களில் சமய சொற்பொழிவுகள், பஜனைகள் என தனது சமயத் தொண்டினை ஆற்றி வருவதுடன் பல சமய நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்து பல ஆன்மீகப் பணிகளை புரிந்து வருகிறார். பல சமயத் தலைவர்களால் பாராட்டும் பெற்றவர். பத்துவருட ஆசிரிய ஆலோசாகர் பதவியில் இருந்து சைவசமய வளர்ச்சியில் பல மாணவர்கள் விருப்புடன் ஈடுபட வைத்திருக்கிறார். இன்றும் ஆலங்களில் சமய சொற்பொழிவுகளைச் செய்து சமயப் பணிகளை ஆற்றிவருவதையிட்டு சமயப் பணிகளுக்காகஅவருக்கு இக்கௌரவம் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெஞ்சமின் திருச்செல்வம்
## (தில்லை நடராசன்)

சிறுவயதில் இருந்தே கலை ஆர்வம் கொண்ட இவர் சிறுவனாக இருந்த போது வரைந்த ஓவியங்களைப் பலரும் பாரட்டி இருக்கிறார்கள். தொடந்து தனது முப்பதாவது வயதில் இருந்து சித்திரம், சிற்பம், நாடகம், கவிதை, கட்டுரை, மேடைநாடகம், விளையாட்டு ஒப்பனை போன்ற கலைகளில் சிறந்து விளங்கினார். விவசாயத்திணைக்களத்தில் உயிர் ஓவியங்கள் வரையும் பணியில் இணைந்து 1500 படங்களுக்கு மேல் அதிகமாக வரைந்து உலக வங்கியின் பாராட்டினைப் பெற்றிருக்கிறார். பல நாடகங்களை எழுதி நடித்தும் இருக்கிறார். வரலாற்று நாடகங்களில் பண்டாரவன்னியன், கும்பகர்ணன, பரதன்,சங்கிலியன் போன்ற பாத்திரங்களில் நடித்து பலரதும் பாராட்டினைப் பெற்றிருக்கிறார். கலை இலக்கியம் என்றில்லாமல் விளையாட்டுத்துறையிலும் ஆணழகன் போட்டியிலும் பங்கு பற்றி பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறன்றார். தனது ஐம்பதாவது வயதில் இருந்து கலைவாழ்வில் இருந்து ஓய்வு பெற்று ஆன்மீக வாழ்வு வாழ்ந்து வருகிறார். இவரது பல துறை சார்ந்த ஆளுமைக்கும் அவரது கலை இலக்கிய செயற்பாடுகளுக்குமாக அவரைக் கௌரவிக்கும் முகமாக கரை எழில் என் இவ்விருது வழங்கி சிறப்புச் செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org